[9th September 1958

SRI T. SAMPATH : அரசாங்கம் நடத்திவரக்கூடிய சில விதைப் பண்ணைகளில் உற்பத்திசெய்கின்ற விதைகள் சரிவர முளைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அந்தப் புகார் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இந்தப் புகார் உண்மையாக இருந்தால், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவரை அத்தகைய புகார் என்னிடம் வரவில்லை.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : விதைப் பண்ணைக்காக குத்தகைக்கோ, கிரயத்திற்கோ எடுத்துக் கொள்ளும் நிலங்கள் அங்கு சாகுபடி செய்யக் கூடிய வார சாகுபடியாளர்களுக்குக் குந்தகம் இல்லாமல் எடுத்துக் கொள்ளப்படுமா ? அதற்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறிய சாகுபடியாளர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் தான் இது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

SRI P. U. SHANMUGAM : திருவண்ணுமலை தாலூக்காவில் உள்ள விதைப் பண்ணை இருக்கும் நிலத்தை கிரயத்திற்கு எடுத்துக்கொண்டாகிவிட்டதா ? அப்படியானல் அந்தக் கிரயம் என் இந்தப் பட்டியலில் கொடுக்கப்படவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

SRI A. VEDARATHNAM : அந்த விதைகள் எந்த முறையில் தயார் செய்யப்படுகிறது ? ஜப்பானிய முறையைக் கையாண்டால் ஒரு ஏக்கருக்குப் பத்து பவுண்டு விதை போதும் என்று கூறப்படுகிறதே. இந்த சிக்கனத்தால் 40 கோடி ரூபாய் விதையில் மாத்திரம் மிச்சம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறதே. அந்த ஜப்பானிய முறையைக் கையாள்வது பற்றி பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜப்பானிய முறைபடி தான் இந்தப் பண்ணைகள் செயல்படுகின்றன.

SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, நெல் போன்ற தானியங்களுக்குத்தான் இந்த விதைப் பண்ணை இருப்பதாக அறிகிறேன். அன்னிய நாட்டுச் செலாவணியைத் தேடித் தருகிற காப்பி, தேயிலை, ஏலம் போன்றவைகளுக்கும் விதைப் பண்ணைகள் இருக்கின்றனவா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தனிக் கேள்விதான் போட வேண்டும். அமைச்சர் பதில் அளிப்பதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி காப்பி, தேயிலை, ஏலம் போன்றவைகளுக்கு விதைப் பண்ணைகள் இல்லை.

Sports Stadium

* 105 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any sports stadium at Tiruchirappalli;

(*b*) whether any representation has been received from (i) The Tiruchirappalli United Cricket Club in 1957 and (ii) The Tiruchirappalli Municipal Council in February 1958, for the construction of a Cricket Stadium at Tiruchirappalli; and

(*c*) if so, the action taken thereon?

9th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no public sports stadium at Tiruchirappalli. The St. Joseph's College, Tiruchirappalli, owns a small sports stadium to be used by the College.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI S. LAZAR : Is it not a fact that a special grant is available from the Union Government for the purpose of establishing such a sports stadium and if so, will the Government consider the selection of Tiruchirappalli which is at the heart of Tamil Nad, for the purpose of establishing one such stadium?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, if the proposal comes from Tiruchirappalli, it will be considered.

Hospitals.

*106 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியூ அமைசசர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, தேனி, அல்லி நகரில் ஒரு ஆஸ்பத்திரி வைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : எங்கள் தேனி நகரத்தில் 20 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். சுற்றுப்புறத்திலும் இரண்டு லட்சம் இருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமென்றால் பத்து மைல்கள் போகவேண்டியிருக்கிறது. சீக்கிரத்தில் அங்கே ஒரு ஆஸ்பத்திரியை அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஜில்லா போர்டினுடைய பொறுப்பாக இருக்கிறது. பஞ்சாயத்து ஏரியாவாக இல்லாத இடங்களில்தான் சர்க்கார் வைக்கும்.

* 107 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

ஒவ்வொரு மேஜர் பஞ்சாயத்து நகரிலும் 10 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி ஒன்றை வைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : இருபதாயிரம் மக்கள் கொண்ட பஞ்சாயத்து போர்டுகளில் ஆஸ்பத்திரிகளை அவசியம் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, கோம்பை, நெய்க்காரப்பட்டி, தேவதானப்பட்டி, ஆயக்குடி, தேனி முதலிய இடங்களில் ஆஸ்பத்திரிகள் வைப்பதைத் தனிக் கொள்கையாக அங்கீகரிக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது அரசாங்கம் ஒரு புதுக் கொள்கையை வகுத்திருக்கிறது. அதாவது ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சி மன்றங்களை அமைக்க உத்தேசித்திருக்கிறோம். ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதுதான் அரசாங்கத்தின் பொறுப்பு. டிஸ்பென்சரி ஏற்படுத்துவது யூனியன் பொறுப்பாக இருக்கும்.